**சுத்தமான சக்தி மற்றும் வலையமைப்பு வினைத்திறன் முன்னேற்ற செயற்திட்டம் - 2014**

---

சுத்தமான சக்தி மற்றும் வலையமைப்பு வினைத்திறன் முன்னேற்ற செயற்திட்டத்தின் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் (ஜீஓஎஸ்எல்) ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2892எஸ்ஆர்ஜ (எஸ்எவ்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் 2.09(அ) ii உறுப்புரை மற்றும் 2013 மே 08 ஆந் திகதிய 0303 எஸ்ஆர்ஜ(ஈஎவ்) ஆம் இலக்க மானிய உடன்படிக்கை என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

**1.2 செயற்திட்டத்தின் நோக்கங்கள், அமுலாக்கல், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

---

செயற்திட்டத்தின் கடன் மற்றும் மானிய உடன்படிக்கைகளின் படி, மின்வலு சக்தி அமைச்சு நிறைவேற்று முகவராக உள்ளதுடன் இலங்கை மின்சார சபை செயற்திட்டத்தின் அனைத்துப்பகுதிகளினதும் அமுல்படுத்தல் முகவராக உள்ளது. அதே நேரம் பகுதி 7 இற்கான அமுல்ப்படுத்தும் முகவராக நிலைபேறான சக்தி அதிகார சபை (எஸ்ஈஏ) உள்ளது. இலங்கையில் சுத்தமான சக்தி வழங்கலை அதிகரிப்பதும் மின்சார வழங்கலின் வினைத்திறன் மற்றும் நம்பகத்தன்மையை முன்னேற்றுவதுமே செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். செயற்திட்ட நிர்வாகக் கைநூலின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ஐ.அ.டொலர் 200 மில்லியன் சமனான ரூபா 25,240 மில்லியனானதுடன் இதில் ஐ.அ.டொலர் 131.5 மில்லியனுக்கு சமனான ரூபா 16,595 மில்லியன் அல்லது 66 சதவீதம் ஆசிய அபிவிருத்தி வங்கியால் வழங்குவதற்கு இணங்கப்பட்டிருந்தது. செயற்திட்டமானது அதனது செயற்பாடுகளை 2013 செப்தெம்பர் 30 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2016 திசெம்பர் 31 அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டுமெனவும் பட்டியலிடப்பட்டிருந்தது.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை

உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவுசெய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வுசெய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வுசெய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக கணக்கிணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் நன்கொடை முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்துசெல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) மானியத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் மற்றும் மானிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்

(எ) நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஐ) கடன் மற்றும் மானிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

**1.5 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1. அபிப்பிராயம்**

இது வரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய, இந்த அறிக்கையின் பந்தி 2.2 இல் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர்த்தும்,

(அ) செயற்திட்டமானது 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைய 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈ) மீளளித்தல்களிற்கு ஆதாரமானவையாக கடன் உடன்படிக்கையில் விதந்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் காணப்பட்டிருந்தன என்றும்,

(ஈ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(உ) கடன் மற்றும் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பாதுக்க மற்றும் பொல்பிட்டிய துணை மின்நிலைய கட்டிடத்தின் நிர்மாணத்திற்காக இரண்டு காணித்துண்டுகளை சுவீகரிப்பதற்காக ஹோமாகம, மற்றும் அம்பஹமுவ கோரளை பிரதேச செயலக அலுவலகங்களில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 25.44 மில்லியன் தொகையான வைப்புக்கள் நடைமுறை வேலைகளின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது ஆசிய அபிவிருத்தி வங்கியால் மேற்கொள்ளப்பட்ட ரூபா 388.30 மில்லியன் தொகையான செலவீடுகள் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் ரூபா 212.73 மில்லியனாக காட்டப்பட்டிருந்தது. வேறுபாடுகள் கணக்காய்விற்கு தெளிவுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டில் செலவிடப்பட்ட ரூபா 3.29 மில்லியன் அளவைக் கிரயம் காணிகளின் கீழ் மூலதனமாக்கப்படுவதற்கு பதிலாக நானாவித செலவினங்களாக கணக்கிடப்படடிருந்தது.

### 2.2.2 சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

செயற்திட்டத்தின் வரைபு நிதிக்கூற்றுக்கள் 2014 மார்ச் 31 அளவில கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படுமாறு வேண்டப்பட்டிருந்த போதிலும் அவை 2015 யூன் 18 இலேயே கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1. நிதிகளின் பயன்பாடு

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போதான மற்றும் 2014 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான முக்கியமான சில புள்ளிவிபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| மூலம் | கடன் /மானிய உடன்படிக்கையில் நிதியளிக்க உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்திய நிதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | மீளாய்வாண்டின் போது | | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
| | ஐ.அ.டொ மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொ மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொ மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஏடிபீ | 131.5 | 16,595.3 | 2,750.0 | 1.6 | 213.0 | 1.6 | 213.0 |
| இலங்கை அரசாங்கம் | 68.5 | 8,644.7 | - | - | - | - | - |
| சீஈபீ | - | - | 959.0 | 1.6 | 210.0 | 2.0 | 269.0 |
| மொத்தம் | 200.0 | 25,240.0 | 3,709.0 | 3.2 | 423.0 | 3.6 | 482.0 |

செயற்திட்ட காலத்தின் 50 சதவீதம் கடந்த பின்னரும் கடன் மற்றும் மானியத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட பெறுகைகளில் 1.2 சதவீதம் மாத்திரமே 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டிருந்தது. ஆகையால், மிகுதிக்காலத்தின் போது கடன் மற்றும் மானியத்தின் பெறுகைகளின் ஒட்டுமொத்த ஒதுக்கீட்டினை பயன்படுத்தும் சாத்தியத்தன்மை ஐயத்திற்கிடமாகவிருந்தது.

### 3.2 பௌதீக செயலாற்றல்

நிலைமாற்றல்கள் உட்கட்டமைப்பை வலுப்படுத்துதல் மற்றும் நிலைமாற்றல் மற்றும் பங்கீட்டு வலையமைப்பை வினைத்திறனாக முன்னேற்றுதல் போன்ற நோக்கத்திற்கான செயற்திட்டத்தின் நடவடிக்கைகளை 06 பகுதிகளின் கீழ் இலங்கை மின்சார சபையால் மேற்கொள்ளப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. ஆகையால் மன்னார், பொல்பிட்டிய, பாதுக்க, மற்றும் கேகாலையிலுள்ள துணை மின்நிலையங்களை நிர்மாணித்தல் மற்றும் நிறுவுதல் பியகம, கொலன்னாவ மற்றும் சபுகஸ்கந்தவிலுள்ள அலை மாற்றி மின்தேக்கிகளை நிறுவுதல் கெபிதிகொல்லாவ, கஹட்டகஸ்தெனிய, கலஹா மற்றும் அக்கரைப்பற்றிலுள்ள கோபுர வரிசை மற்றும் கன்றிறிஸ்களை நிர்மாணித்தல் மற்றும் நிறுவுதல் போன்ற நடவடிக்கைகளை செயற்திட்டத்தின் கீழ் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், செயற்திட்டத்தின் அனைத்துப் பகுதிகளினதும் பிரதான நடவடிக்கைகள் மீளாய்வாண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

செயற்திட்டத்தின் பௌதீக செயலாற்றல் மீது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) பகுதி – 1 இன் தொகுதி அ இன் கீழ் மன்னாரிலுள்ள துணை மின் நிலையத்திற்கான நில அளவை நடவடிக்கைகள் மற்றும் அதே பகுதியின் தொகுதி – ஆ இன் கீழ் நிலைமாற்றி வரிசைகளின் சுயவிபர ஆய்வு போன்றன 1½ வருடங்கள் காலதாமதத்தின் பின்னர் 2015 மார்ச் இலேயே ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) நிலைமாற்றல் மற்றும் விநியோகித்தல் வலையமைப்பை வினைத்திறனாக முன்னேற்றுவதற்கான செயற்திட்டத்தின் பகுதி – 2 இன் கீழுள்ள ஒட்டுமொத்த நடவடிக்கைகளும் காணிகளை சுவீகரித்தல் மற்றும் கொள்வனவு செயன்முறைகளிலுள்ள காலதாமதத்தின் காரணமாக மந்தமான முன்னேற்றத்தை காட்டின.

(இ) செயற்திட்டத்தின் பகுதி – 3 இன் கீழான பாதுக்க வலு நிலைமாற்றல் அபிவிருத்தி நடவடிக்கைகள் பகுதி – 4 இன் கீழான கேகாலை வலு நிலைமாற்றல் அபிவிருத்தி நடவடிக்கைகள் ஆகியன நிர்மாண வேலைகளிற்கான நில அளவை மற்றும் நிலைமாற்றல் வரிசைகளை நிறுவுதல் போன்றவற்றால் மீளாய்வாண்டின் இறுதியில் ஆரம்ப கட்டத்திலேயே இருந்தது.

### 3.3 நிதிக் கட்டுப்பாட்டிலான பிரச்சினைகள்

ஒட்டுமொத்த செயற்திட்டத்திற்கான நேரடி பொறுப்பு தனி அலகாக இலங்கை மின்சாரசபைக்கு ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவால், இலங்கை மின்சார சபையால் செயற்திட்ட செயற்பாட்டுக் காலத்தின் போது நிதி மற்றும் பௌதீக செயலாற்றலை நேர அடிப்படையில் தீர்மானித்தல் மற்றும் முறையான கண்காணிப்பு பொறிமுறையை அமுலாக்கல் போன்றவற்றை உறுதிப்படுத்த முடியாதிருந்தது.